**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081867

1. District மாவட்டம்: தஞ்சாவூர் PS: V & AC, தஞ்சாவூர் காவல்நிலையம் Year: 2023 ஆண்டு FIR No.: 3/23 மு.த.அ. எண் Date: 12-10-23 நாள்

2. (i) Act சட்டம்: P. C. Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 27.9.2023 at about 11.00hrs, 10.10.2023 at about 12.30hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.10.2023 Time நேரம் : 07.00hrs F.I.R Registered
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : on 12.10.23 at 08.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ADFO, மீன்வளத் துறை அலுவலகம், அரண்மனை வளாகம், தஞ்சாவூர். 7KM வடக்கு
   Beat Number : முறைக காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. கார்த்திக் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பிச்சைமணி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.06.1980 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி எண் 37, எலன் கோவில் தெரு, புன்னைநகர் (வடக்கு), நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. முனியசாமி, ADFO, அரண்மனை வளாகம், தஞ்சாவூர். மீன்வளத் துறை அலுவலகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன் :- தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 12.10.2023 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தஞ்சாவூர், நாஞ்சிக்கோட்டை ரோடு, எவர்கோல்ட் சிட்டி நகரைச் சேர்ந்த செல்லையன் மகன் S.கார்த்திக் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: S.கார்த்திக், த/பெ. செல்லைய்யன், எண்.37, எவர்கோல்ட் சிட்டி, முல்லை நகர் (வழி), நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் – 613006 பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது மனைவி டாக்டர் சண்முகபிரியா அவர்கள் புதுக்கோட்டையில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறார். நான் தஞ்சாவூர், நாஞ்சிக்கோட்டை ரோடு, E.B. காலனி, ஆரோக்கியா நகர், 6வது தெருவில் கல்கி மருந்தகம் என்ற பெயரில் மருந்துக்கடை நடத்தி வருகிறேன். அந்த கட்டிடத்தின் ஒரு பகுதியில் மஹதி சர்க்கரை நோய் மையம் என்ற பெயரில் டையாப்டிக்ஸ் சென்டர் ஆரம்பிப்பதற்காக அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன். அதற்கான அனுமதி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12-10-2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/10/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. ARUN PRASAD
Rank: நிலை Inspector of Police, V&AC, Thanjavur

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பெறுவதற்கு தஞ்சாவூர், சுகாதார துறை, இணை இயக்குநர் (சுகாதார பணிகள்) அவர்களுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்தேன். அதன் பின்னர் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு சுகாதார துறை, இணை இயக்குநர் அவர்கள் எனது சர்க்கரைநோய் மையத்திற்கு நேரடியாக வந்து ஆய்வு செய்தார். அப்போது, Fire and Safety மற்றும் Pollution Control certificate ஆகியவற்றை சமர்பிக்கும்படி அறிவுறுத்தி சென்றார். இந்நிலையில் நான் அந்த இடத்திற்கு Fire and Safety (NOC) சான்று பெறுவதற்கு 13.09.2023 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தஞ்சாவூர் மாவட்ட தீயணைப்பு அலுவலகத்தில் சென்று விண்ணப்பம் செய்திருந்தேன். அத்துடன் கட்டிட உறுதிப்பாடு சான்றிதழ், கிளினிக் பிளான், வாடகை ஒப்பந்த பத்திரம், புளூபிரிண்ட் காப்பி மற்றும் மருத்துவக் கழிவுகளுக்கான நிறவரை சான்று ஆகியவை இணைத்து விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பம் தொடர்பாக 27.09.2023ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் தஞ்சாவூர் ADFO, திரு.முனியாண்டி அவர்கள் அவரது Staff-வுடன் இருச்சக்கர வாகனத்தில் வந்து, நான் ஆரம்பிக்கவுள்ள டயாப்டிக்ஸ் சென்டர் இடத்தை நேரில் ஆய்வு செய்தார். அப்போது எனது மருந்துக்கடையில் வேலைப்பார்க்கும் ராதிகா என்பவரும் உடன் இருந்தார். பின்னர் என்னை தனியாக கூப்பிட்டு, எனது டயாப்டிஸ் சென்டரின் ரிஷப்ஷனில் வைத்து, நீங்கள் இணைத்துள்ள வாடகை ஒப்பந்த பத்திரம் முடிவுறும் தருவாயில் உள்ளது, அதற்கு பதிலாக புதிய வாடகை ஒப்பந்த பத்திரத்தையும், கட்டிடத்திற்கான வீட்டு வரியை வணிக வரியாக மாற்றி, அந்த ரசீதையையும் அலுவலகம் வந்து கொடுக்கும்படி தெரிவித்தார். மேலும் எனது மனுவின் நகல் என்னிடம் இல்லாததால் அவர் கையில் வைத்திருந்த எனது மனுவினை என்னுடைய செல்போனில் அவரிடம் கேட்டு போட்டோ ஒன்று எடுத்துக்கொண்டேன். மேலும், உங்கள் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து, மாவட்ட அலுவலருக்கு அனுப்புவதற்கு பதினைந்தாயிரம் பணம் தரவேண்டும் என்று சொன்னார். அதற்கு என்னிடம் தற்சமயம் பணம் இல்லை என்று தெரிவித்தேன். அதற்கு அவர் ஒன்றும் சொல்லாமல் சென்றுவிட்டார். மீண்டும் அவர் 10.10.2023 ஆம் தேதி சுமார் 12.00 மணிக்கு செல்போன் மூலம் என்னை தொடர்புக் கொண்டு, உடனே அலுவலகம் வரும்படி சொன்னார். நான் அன்றைய தினம் சுமார் 12.30 மணிக்கு தஞ்சாவூர் அரண்மனையில் வளாகத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு சென்று, ADFO முனியாண்டி அவர்களை சந்தித்து, புதிய வாடகை ஒப்பந்த பத்திரம் மற்றும் வணிக வரி ரசீது ஆகியவற்றின் நகல்களை கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்டு, என்ன சார், பொதுவா நீங்கதான் எங்கள தொந்தரவு பண்ணுவீங்க. ஆனா, நான்தான் உங்களுக்கு போன் பண்ணவேண்டியதா இருக்கு, பணம் கேட்டிருந்தேனே, என்னாச்சு என்று கேட்டார். சார் ரொம்ப கஷ்டமா இருக்கு

என்று சொன்னேன். அதற்கு அவர், நான் கேட்ட பணத்துல்ல ஆயிரம் ரூபாய் குறைத்துக்கொண்டு பதினான்காயிரம் கொடுக்கும்படி கறாராக சொன்னார். அதற்கு நான், சரி சார், பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு, வந்துவிட்டேன். எனக்கு அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.14,000/-த்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே தஞ்சாவூர் மாவட்ட தீயணைப்புத் துறை ADFO திரு.முனியாண்டி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் தஞ்சாவூர் மாவட்ட தீயணைப்பு அலுவலகத்தில் கொடுத்த விண்ணப்பத்தின் நகல், கட்டிட உறுதிப்பாடு சான்றிதழ், கிளினிக் பிளான், புளூபிரிண்ட் காப்பி, மருத்துவக் கழிவுகளுக்கான நிறவரை சான்று, புதிய வாடகை ஒப்பந்த பத்திரம் மற்றும் வணிகவரி ரசீது ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd- S.கார்த்திக் 12.10.2023. ஐயா/அம்மா, மேற்படி புகாரைப் பெற்று, புகாரின் உண்மைத்தன்மையை உறுதி செய்தும், புகாரின்பேரில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 03/2023 U/s 7 of Prevention of corruption Act (as amended in 2018)-ன்படி 12.10.2023ஆம் தேதி 08.30 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (ஒப்பம்).R.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு தஞ்சாவூர், அம்மா, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவைகளை கனம் கும்பகோணம் தலைமை குற்றவியல் நடுவர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் நகல் ஒன்று அலுவலக கோப்பில் விசாரணைக்கும் வைத்தேன்.

A. Arun Prasad 12/10/23

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION
THANJAVUR